| F–9262 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA1C2 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2023.**

**First Semester**

தமிழ்

பக்தி இலக்கியம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours — Maximum : 75 Marks

பகுதி அ — $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. ஞானசம்பந்தரின் திருமறைக்காடு பதிகத்தில் பாடப்படும் இறைவன், இறைவி பெயர்கள் யாவை?

2. திருவாரூர் பதிகத்தில் பாடப்படும் இறைவன், இறைவி பெயர்கள் யாவை?

3. திருக்கோத்தும்பி இயற்றியவர் யார்?

4. ‘என்னைத் தன்பாற்படுத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே’—என்று பாடியவர் யார்?

5. திருப்பாவைக்கு ஆண்டாள் இட்ட பெயரைக் கூறுக.

6. திருவாய்மொழியின் இரண்டாம் பத்து இயற்றியவர் யார்?

7. இரட்சணிய சரிதத்தினுள்ள எவையேனும் நான்கு காண்டங்களின் பெயர்களை எழுதுக.

8. ஆத்மரட்சணை வழங்கும் ஓர் அருமருந்து எது? அதை இயற்றியவர் யார்?

9. மஸ்தான் சாசிபு இயற்பெயர் என்ன?

10. எண்ணரும் பேரருளாய் நின்றிரங்குபவன் யார்?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடையளிக்க.

11. (அ) சம்பந்தர் பாடும் பரமனின் பெருமைகள் யாவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) ‘கரியமால் அயனுந்தேடிக் கழலிணை காணமாட்டா’ என்று சுந்தர் பாடியதை விளக்குக.

12. (அ) ‘நானார் என் உள்ளமார்’ எனத் தொடங்கும் திருவாசகத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) ‘மன்னுக தில்லை’ எனத் தொடங்கும் பாடலில் சேந்தனார் கருத்தை எழுதுக.

13. (அ) பாவை நோன்பு கடைப்பிடித்தல் குறித்து ஆண்டாள் கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) திருவாய்மொழியின் இரண்டாம் பத்தில் நம்மாழ்வார் உணர்த்தும் கருத்துகளை எழுதுக.

14. (அ) ஹச்.ஏ.கிருட்டிணப்பிள்ளையின் பன்முக ஆளுமைப் பண்புகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) இயேசு பெருமானின் சிறப்புகளை நும்பாடப் பகுதி கொண்டு விளக்கி எழுதுக.

15. (அ) ஆனந்தக் களிப்பில் காப்புப் பாடலின் கருத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) குணங்குடியான் கூறும் உபதேசம் குறித்து எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. திருநாவுக்கரசர் திருக்குறுந்தொகைப் பதிகத்தில் கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

17. அற்புதத் திருவந்தாதியில் வெளிப்படும் இறை உணர்வின் நுட்பங்களை விவரிக்க.

18. திருமாலின் அற்புதங்களைப் பெருமாள் திருமொழி வழி விவரித்துரைக்க.

19. இரட்சணிய சரிதம் உணர்த்தும் இலக்கிய நயங்களைப் புலப்படுத்துக.

20. தவத்தின் மேன்மைகள் குறித்து மஸ்தான் சாகிபு உணர்த்தும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

———————

| F–9263 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA2C1 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2023**

**Second Semester**

**தமிழ்**

**காப்பிய இலக்கியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. சிலப்பதிகாரம் எத்தனை காண்டங்களை உடையது? மதுரைக் காண்டத்தில் இடம்பெறும் காதைகள் எத்தனை?

2. மணிமேகலைக் காப்பியத்தின் மற்றொரு பெயர் யாது? ஆசிரியர் யார்?

3. மணநூல் என அழைக்கப்படுவது எது? அக்காப்பியத்தின் சூழ்ச்சிக்காரன் யார்?

4. கொங்குவேளிர் பிறந்த இடம் யாது? பெருங்கதையின் மற்றொரு பெயர் என்ன?

5. கம்பர் பிறந்த ஊர் எது? இராமாயணம் அரங்கேறிய இடம் எது?

6. தொண்டர் சீர் பரவுவார் எனப்பட்டவர் யார்? திருத்தொண்டத்தொகை பாடியவர் யார்?

7. திருவிளையாடற் புராணம் என்றால் என்ன?

8. வில்லிப்புத்தூராரை ஆதரித்த மன்னன் யார்? வில்லிபாரதம் எவ்வகைப் பாவினால் ஆனது?

9. இரட்சணிய சரிதம் எத்தனை பருவங்களைக் கொண்டது? அதில் உள்ள பாடலங்கள் எத்தனை?

10. சீறா என்ற அரபுச் சொல்லின் பொருள் யாது? நபிகளின் பிறப்பு இடம் பெற்ற படலம் எது?

பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கண்ணகியின் சீற்றமும் தோற்றமும் கண்டு வாயிற்காவலன் அரசனிடம் கூறியவற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) அறவணர்த் தொழுத காதை வழி சாத்தனார் உணர்த்தும் வாழ்வியல் உண்மைகளை விளக்குக.

12. (அ) சுரமஞ்சரியின் கோட்பாடு யாது? அதைத் தகர்க்கச் சீவகன் எவ்வாறு சூளுரைத்தான்? தெளிவுபடுத்துக.

(அல்லது)

(ஆ) பெருங்கதையில் பிரச்சோதனன் – சோடாகியாழ் வழி அறியலாகும் சிறப்பியல்புகளை விளக்குக.

13. (அ) கம்பர் உருக்காட்டுப் படலம் வழி உணர்த்தும் வாழ்வியல் பதிவுகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) சுந்தரர் கைலாய நிகழ்வில் மானிடப் பண்பின் நிலை குறித்துப் பாடிய பக்திநெறியைப் புலப்படுத்துக.

14. (அ) மன்னன் புலவர்க்குப் பொற்கிழி வழங்கும்போது குற்றம் உள்ளது என்று தடுத்து கூறிய நிகழ்வினை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) சபா பருவ நிகழ்வுகளின் வாயிலாக வில்லிப்புத்தூரார் உணர்த்தும் வாழ்வியல் அறங்களைக் குறிப்பிடுக.

15. (அ) எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை சூழ்வினைப் படலத்தில் கூறும் கருத்துக்கள் எழுதுக.

(அல்லது)

(ஆ) சீறாப்புராணத்தின் சிறப்புகள் குறித்து விளக்கியுரைக்க.

பகுதி இ $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. மணிமேகலை துறவு நெறி தவறாதவர் என்பதை நும்பாடப்பகுதி கொண்டு விவரிக்க.

17. கொங்குவேளிர் பெருங்கதையில் வரலாற்றுப்பதிவுகளைத் தமிழ் இலக்கியங்களுடன் ஒப்பிட்டுள்ளார் என்பதை விவரிக்க.

18. கம்பரின் புலமை ஆளுமையைச் சுந்தரகாண்டப் பாடல்கள் கொண்டு விவரிக்க.

19. வில்லிபாரதத்தின் வழி அறியலாகும் வாழ்வியல் அறங்களைச் சூதாட்டச் சருக்கம் வழிநின்று விரித்துரைக்க.

20. சீறாப்புராணத்தில் அறியலாகும் இலக்கிய நயங்களை நும்பாடப்பகுதி கொண்டு நிறுவுக.

**F–9264**

**Sub. Code**
**7MTA2C2**

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2023**

**Second Semester**

**தமிழ்**

**சிற்றிலக்கியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடை தருக.

1. பாட்டியல் நூல் கூறும் கலம்பக உறுப்புகள் எத்தனை? அதில் முதல் ஐந்தைக் கூறுக.

2. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் பெயர்க் காரணம் தருக.

3. 'தமிழ்விடு தூது' எதன்பால் அமைந்தது?

4. 'மங்கையர் கண் புனல்மொழிய மழைபொழியும் காலம்' என்று பாடியவர் யார்?

5. கலிங்க வேந்தனின் பெயர் என்ன?

6. விக்கிரம சோழனின் பட்டத்தரசி பெயர் என்ன?

7. மூத்த பள்ளி, இளைய பள்ளியின் பெயரினைக் கூறுக.

8. "நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பது உன்னை என்றும்" என்று பாடியவர் யார்? பாடல் இடம்பெறும் நூல் எது?

9. ‘கொல்லிமலை எனக் கிளைய செல்லிமலை அம்மே’ - பொருள் தருக.

10. நால்வர் நான்மணி மாலைக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?

### பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தோழி, செவிலிக்கு அறத்தொடு நிற்கும் நிலை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) குமரகுருபரர் கலைமகளிடம் வேண்டியது யாது? விளக்குக.

12. (அ) ‘தமிழ்விடு தூது’ என்ற நூலில் தமிழை ஆசிரியர் தேவரோடு தொடர்புபடுத்தி எவ்வெவ்வாறு புகழ்கிறார்? விளக்குக.

(அல்லது)

(ஆ) தமிழைத் தூது விடுக்கும் தலைவி பிறபொருள் தூதிற் சிறவா என்றார்? எவ்வாறு? விளக்குக.

13. (அ) சோழப் = படையினரின் சிறப்புகள் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) விக்கிரமசோழன் சிவபெருமானை வணங்கும் முறையினை விளக்குக.

14. (அ) இளைய பள்ளியின் ஏசல் திறத்தினை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) கூடாரை வெல்லுஞ் சீர்க் கோவிந்தனைப் பாடிப் பறைகொண்டு பெறும் சன்மானமாகக் கன்னிப்பெண்கள் எவற்றைக் கூறுகின்றனர்? விளக்குக.

15. (அ) குறத்தி குறி சொல்லும் முறையினை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) திருநாவுக்கரசரின் சமயப் பணிகள் குறித்து விளக்கி எழுதுக.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. செங்கீரைப் பருவத்தின் சிறப்புக்களை முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் கொண்டு நிறுவு.

17. சொக்கநாதருடைய திருவடிவத்தினை தலைவி தமிழுக்கு எவ்வாறு எடுத்துரைக்கிறான்? ஆராய்க.

18. கலிங்கத்துப் பரணியில் இடம்பெறும் போர்க்களக் காட்சிகளை விவரிக்க.

19. அபிராமியின் பெருமைகளை அபிராமப்பட்டர் போற்றிப் புகழும் பாங்கினை விவரிக்க.

20. திருக்குற்றால மலையின் சிறப்புக்களைத் தொகுத்துரைக்க.

| F–9265 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA2C3 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2023.**

**Second Semester**

**தமிழ்**

**இலக்கியக் கொள்கைகளும் திறனாய்வும்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours                                  Maximum : 75 Marks

**பகுதி அ**                    ($10 \times 2 = 20$)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. திறனாய்வின் நோக்கம் யாது?

2. திறனாய்வாளரின் பணிகளை வரையறுக்க.

3. முருகியல் என்றால் என்ன?

4. ஒப்பீட்டு முறைத் திறனாய்வு என்றால் என்ன?

5. இலக்கிய உணர்ச்சியின் பயன் யாது?

6. படைப்புக் கற்பனை என்றால் என்ன?

7. நாடகத்தின் வகைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

8. ‘சென்ட்ரியூ’ –குறிப்பு வரைக.

9. ஐரோப்பிய உளப்பகுப்பாய்வியல் அறிஞர்கள் இருவரை குறிப்பிடுக.

10. ‘பிராய்டு’ அடிமனத்தை ஆராய்ந்ததற்கு அடிப்படை யாது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடையளிக்க.

11. (அ) நுண் கலைகளில் இலக்கியத்தின் சிறப்பிடம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) இலக்கியத்தின் தனித்தன்மைகளை விளக்குக.

12. (அ) விதிமுறைத் திறனாய்வின் சிறப்பியல்புகளைக் கூறுக.

(அல்லது)

(ஆ) மதிப்பீட்டுத் திறனாய்வின் கூறுகளை ஆராய்க.

13. (அ) படைப்புக் கற்பனை குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) இலக்கிய உணர்ச்சியின் பயன்களை வெளிப்படுத்துக.

14. (அ) இலக்கியத்தைச் சுவைப்பதில் உள்ள வேறுபாட்டினை விளக்குக.

(அல்லது)

(ஆ) புதினத்தின் வகைகளை விளக்கி எழுதுக.

15. (அ) அறிவியல் திறனாய்வுக் கொள்கையை விரிவாக விளக்குக.

(அல்லது)

(ஆ) 'நனவோடை முறை' என்றால் என்ன? விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. இலக்கியத் திறனாய்விற்குக் கோட்பாடுகளின் தேவை குறித்துக் கட்டுரை எழுதுக.

17. திறனாய்வாளர்களின் தகுதிகள் குறித்துக் கட்டுரைக்க.

18. கற்பனைக் கூறுகளை விளக்கிக் கட்டுரை எழுதுக.

19. ஹைக்கூ, சென்ட்ரியு, லிமரிக் இவற்றின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து விரித்துரைக்க.

20. திறனாய்வுக் கொள்கைகள் குறித்துக் கட்டுரை வரைக.

———————

| F–9266 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA2C4 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2023**

**Second Semester**

**தமிழ்**

**தொல்காப்பியம் – சொல்லதிகாரம் –(சேனாவரையர் உரை)**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. கிளவி என்றால் என்ன?

2. பெண்பாற்ச் சொற்களின் ஈறுகளைக் கூறுக.

3. உருபு மயக்கம் என்றால் என்ன?

4. விளியேற்கும் உயர்திணைப் பெயர்களைக் கூறுக.

5. “ஆயிரண்டென்ப அறிந்திசி னோரே” – பொருள் தருக.

6. படற்கை ஒருமை வினைமுற்றுச் சொற்களைக் கூறுக.

7. இடையியல் என்றால் என்ன?

8. மா என் கிளவி வியங்கோள் அசைச்சொல் – விளக்குக.

9. “பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே" – விளக்குக.

10. ஒட்டுக்களின் வகைகளைக் கூறுக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) பால் வழுவமைதி என்றால் என்ன? தக்க சான்றுகளுடன் விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) இனச்சுட்டில்லா பண்புகொள்பெயர்க் கொடையையும் வண்ணச்சினைச் சொல்லையும் ஒப்பிடுக.

12. (அ) "அன்ன மரபினவே ஆகுபெயர்க் கிளவி" – விளக்குக.

(அல்லது)

(ஆ) ஆகுபெயர் என்றால் என்ன? அதன் பாகுபாட்டை விளக்கி எழுதுக.

13. (அ) விரவுப் பெயர்களைத் தொல்காப்பியர் எவ்வாறு தொகை வகையாகச் சுட்டுகிறார்? விளக்குக.

(அல்லது)

(ஆ) எச்சங்கள் அடிக்கி முடிதல், எச்சங்களிடையே பிறசொற்கள் வருதல் – இவற்றை விளக்கி எழுதுக.

14. (அ) அசைநிலை, இசைநிறை என்றால் என்ன? இவற்றை வேறுபடுத்துக.

(அல்லது)

(ஆ) உரிச்சொற்களின் பொருளை அறியும்போது மனதிற் கொள்ளவேண்டியவை யாவை? விளக்குக.

15. (அ) தொகைச் சொற்களில் பொருள்சிறக்குமிடங்களைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) உருபன்களைப் பற்றி சிறுகுறிப்பு வரைந்து, தமிழ் வினைச் சொல்லில் அமையும் உருபன்களைப் பிரித்து உணர்த்துக.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. கிளவியாக்கம் தொடரியல் கோட்பாடுகளை விளக்கும் பகுதி என்பதை நிறுவுக.

17. ஆறாம்வேற்றுமை பற்றித் தொல்காப்பியர் கூறும் கருத்துக்களை விவரிக்க.

18. குறிப்பு வினைமுற்று குறித்து ஆய்வுக் கட்டுரை வரைக.

19. இடைச்சொற்களின் வகைகள் குறித்துக் கட்டுரைக்க.

20. பொருள்கோள் பற்றிக் கட்டுரை வரைக.

———————

**F–9268**

**Sub. Code**
**7MTA2E2**

## M.A. DEGREE EXAMINATION, APRIL 2023

**Second Semester**

**தமிழ்**

**விருப்பப்பாடம் — உமறுப்புலவர்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours        Maximum : 75 Marks

**பகுதி அ**        (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடை தருக.

1. இசுலாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதி வெளியிட்டவர்களின் பெயரினைச் சுட்டுக.

2. இசுலாம் மதம் அரபு நாட்டில் தோற்றுவிக்கப்பட்ட நூற்றாண்டு எது?

3. இறைத்தூதர்கள் என்பவர் யார்?

4. சீறாப்புராணத்தில் இடம்பெறும் புராணச் செய்திகள் நான்கினைச் சுட்டுக.

5. 'அருவம்' என்றால் என்ன?

6. 'இணை வைத்தல்' என்றால் என்ன?

7. சீறாப்புராணத்தில் இடம்பெற்றுள்ள நில வருணனைகள் நான்கினைக் கூறுக.

8. சீறாப்புராணத்திற்கு உரை எழுதியவரின் பெயரினைச் சுட்டுக.

9. இஸ்லாமிய ஆய்வுகள் நான்கினைக் கூறுக.

10. 'நபி வாழ்த்து' என்றால் என்ன?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) உமறுப்புலவரின் காலம் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) காப்பிய இலக்கணம் குறித்து விளக்கி எழுதுக.

12. (அ) சீறாப்புராணத்தின் தனித்தன்மைகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) உமறுப்புலவரின் காதல் வருணனைச் சிறப்புகளை விளக்குக.

13. (அ) உமறுப்புலவரின் இறை மறுப்புக் கொள்கைகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) இஸ்லாமியத்தின் அடிப்படைக் கொள்கைகள் குறித்து விளக்குக.

14. (அ) சீறாப்புராணம் புலப்படுத்தும் தலைமை நிலைப்பாத்திரம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) உமறுப்புலவரின் வாழ்வு நிலைப் படைப்புகள் குறித்து விளக்குக.

15. (அ) இஸ்லாமிய மரபுகள் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) இஸ்லாமியப் படைப்புகளில் பாட வேறுபாடுகள் குறித்து விளக்கி எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. இஸ்லாமிய மார்க்கம் தமிழகத்தில் பரவிய வரலாறு குறித்துக் கட்டுரை வரைக.

17. சீறாப்புராணத்தின் வழி அறியலாகும் இயற்கை வருணனை குறித்த செய்திகளைத் தொகுத்துரைக்க.

18. உமறுப்புலவரின் கற்பனைத் திறனை விளக்கிக் கட்டுரை வரைக.

19. சீறாப்புராணத்தின் வழி அறியலாகும் அரசியல் நிலை குறித்துக் கட்டுரை வரைக.

20. இஸ்லாமியச் சமயச் சடங்குகள் குறித்துக் கட்டுரை வரைக.

---

| F–9269 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA2E3 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2023**

**Second Semester**

**தமிழ்**

**விருப்பப்பாடம் – சித்தர் இலக்கியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. சித்தவாசம் என்பதன் பொருள் என்ன?

2. சித்திரகூடம் எங்குள்ளது? பொருள் என்ன?

3. திருமந்திரத்திலுள்ள தந்திரம் எத்தனை? பாடல்கள் எவ்வளவு?

4. "அஞ்செழுத்திலே பிறந்து அஞ்செழுத்திலே வளர்ந்து... அஞ்சலஞ்சல் என்று நாதன் அம்பலத்தில் ஆடுமே" என்று பாடியவர் யார்?

5. "வெண்காயம் உண்டு, மிளகுண்டு சுக்குண்டு உண்காயம் ஏதுக்கடி – என்று பாடிய சித்தர் யார்?

6. அழுகணிச் சித்தர் – பெயர் பொருத்தம் தருக.

7. பட்டினத்தார் என்னென்ன பெயர்களால் அழைக்கப்படுகின்றார்?

8. பச்சை வாழை மட்டை இலைகளைக் கொண்டு தன் அன்னைக்கு ஈமக்கடன் கழித்த சித்தர் யார்?

9. சக்கிலி காசும், பேய்ச்சுரைக்காயும் மணலையும் காசிகுருவிடம் பெற்று ஞானநிலை பெற்ற சித்தர் யார்?

10. சிவவாக்கியர் கூறும் மூவர், ஆலமுண்டகண்டர் – யார், யார்?

### பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கமலமுனி–பாம்பாட்டி சித்தர் குறித்த வரலாறு தருக.

(அல்லது)

(ஆ) பதிணெண் சித்தர்களின் பெயர் குறித்து குறிப்புடன் எழுதுக.

12. (அ) திருமூலரின் சித்த தத்துவநெறிகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) சிவவாக்கியாரின் இறையியல் அனுபவங்கள் குறித்து எழுதுக.

13. (அ) வாழ்வியல் குறித்து குதம்பைச் சித்தர் கூறும் கருத்துகள் யாவை?

(அல்லது)

(ஆ) அழுகணிச் சித்தர் உலக மக்களுக்குக் கூறும் அறிவுரைகள் யாவை?

14. (அ) யோகநிலை குறித்து பட்டினத்தார் கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) பட்டினத்தார் வாழ்க்கைக் குறிப்புத் தருக.

15. (அ) பத்திரகிரியார் பாடல்கள் வழிநின்று இறை தத்துவ அனுபவத்தை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) ஞானக் கேள்விகள் மூலம் எக்காலம் எனக்கருள் கீட்டும் என்று பாடிய பாடல் கருத்தைத் தருக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை எழுதுக.

16. சித்தர்களின் வேறுபாடுகள் கடந்து சமுதாய இலக்கியப் பண்பாட்டுப் பதிவுகளைத் தொகுத்துரைக்க.

17. இறைவனை அடைவதற்கான வழிமுறைகளாகச் சிவவாக்கியம் தரும் செய்திகளை விரித்துரைக்க.

18. அழுகணிச் சித்தர் இலக்கிய நயத்துடன் உடலியல், உளவியல் தத்துவ நெறிகளைப் பாடலுடன் விளக்கியுரைக்க.

19. பட்டினத்தார் தம் நெஞ்சோடு புலம்பல் பகுதியில் கூறிய இறை ஆன்மநேய கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

20. பத்திரகிரியாரின் வாழ்க்கை வரலாற்றுடன் சித்த யோக நெறியை அவரது கண்ணிகளின் வழியே ஆராய்க.

———————

| F–9270 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA3C1 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2023**

**Third Semester**

தமிழ்

சங்க இலக்கியம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடை தருக.

1. இயன்மொழி என்றால் என்ன?

2. பதிற்றுப்பத்தின் ஆறாம் பத்தைப் பாடியவர் யார்? யாரைப் பாடியுள்ளார்?

3. அகநானூற்றின் பகுப்பு முறையினைக் குறிப்பிடுக.

4. ஐங்குறுநூற்றில் இடம்பெறும் 'வேழம்' என்பதற்குத் துறை விளக்கம் தருக.

5. 'வரைவுகடாயது' என்றால் என்ன?

6. பரிபாடல் உறுப்புகளாக உ.வே.சா கூறுவனவற்றைக் குறிப்பிடுக.

7. குறிஞ்சிப் பாட்டினைப் 'பெருங்குறிஞ்சி' என்று அழைத்ததின் காரணம் யார்?

8. முல்லைப்பாட்டில் வருணிக்கப்பட்டுள்ள பொழுதுகள் யாவை?

9. கரிகாலனிடம் கடியலூர் உருத்திரங்கண்ணார் பெற்ற பரிசுத்தொகையைக் கூறுக.

10. சிறுபாணாற்றுப்படையில் சுட்டப்பெற்றுள்ள ஊர்களின் பெயர்களைக் கூறுக.

## பகுதி ஆ $(5 \times 5 = 25)$

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) முரஞ்சியூர் முடிநாகராயர் சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனுக்கு அறிவுரை கூறி வாழ்த்திய பாங்கினை விளக்குக.

(அல்லது)

(ஆ) ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் கொடைச் சிறப்பு குறித்து விளக்கி எழுதுக.

12. (அ) நெய்தல்கலியில் அமைந்த தோழி கூற்றின் உள்ளுரைச் சிறப்பினை விளக்குக.

(அல்லது)

(ஆ) வேட்கைப்பத்து புலப்படுத்தும் தோழியின் ஒழுகலாறுகளை ஐங்குறுநூறு வழி விளக்குக.

13. (அ) வரைவுகடாயது குறித்து அறிவுடைநம்பி பாடிய அகநானூற்று நெய்தல் திணைப் பாடலின் உள்ளுரைச் சிறப்பினை விளக்குக.

(அல்லது)

(ஆ) குறுந்தொகை பரத்தை கூற்றுப் பாடலின் உள்ளுரை நயத்தினை ஆலங்குடி வங்கனார் பாடல் கொண்டு நிறுவுக.

14. (அ) புனலாடல், பூக்கொய்தல் போன்ற செய்திகள் குறிஞ்சிப்பாட்டில் கூறப்பெற்றுள்ள திறத்தினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) முல்லைப்பாட்டில் காட்சிப்படுத்தப்படும் பாசறை நிகழ்வுகளை விளக்குக.

15. (அ) பட்டினப்பாலையில் கூறப்பட்டுள்ள காவிரி பூம்பட்டினத்தின் சிறப்புகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) சிறுபாணாற்றுப்படையில் கூறப்பட்டுள்ள நெய்தல், முல்லை, மருதநில மக்களின் வாழ்க்கை முறைகளை விளக்குக.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

1. எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

2. பாண்டியன் தலையாலங்கானத்துச் செறுவென்ற நெடுஞ்செழியன் குறித்த செய்திகளை நும் பாடப்பகுதி கொண்டு விவரிக்க.

3. பிரிதலும் பிரிதல் நிமித்தமும் என்னும் உரிப்பொருள் அகநானூற்றுப் பாலைதிணைப் பாடல்களில் அமைந்துள்ள பாங்கினை ஆராய்க.

4. பரிபாடல் கூறும் செவ்வேள் வரலாற்றினைத் தொகுத்துரைக்க.

5. குறிஞ்சிப்பாட்டுத் தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல் என்னும் கூற்று அகத்துறையைச் சார்ந்தது என்பதை நிறுவுக.

6. பட்டினப்பாலையில் கூறப்பட்டுள்ள பண்பாட்டுச் செய்திகள் குறித்துக் கட்டுரை வரைக.

| F–9271 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA3C2 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2023.**

**Third Semester**

தமிழ்

தொல்காப்பியம் பொருளதிகாரம் (நச்சினார்க்கினியர் உரை)
(முதல் ஐந்து இயல்கள்)

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. நெய்தல் நிலத்தலைமகன் எவ்வாறு அழைக்கப்பெறும்?

2. "பனி எதிர் பருவமும் உரித்தென மொழிப்" – பொருள் தருக.

3. "உண்டாட்டு" என்றால் என்ன?

4. தும்பைத் திணையின் துறைகள் ஐந்திணைக் கூறுக.

5. "முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே" – முன்னைய மூன்று எது?

6. "தாய் அறிவுறுதல் செவிலியோடு ஒக்கும்" – பொருள் தருக.

7. "நெஞ்சு தளை அவிழ்ந்த புணர்ச்சிக் கண்ணும்" – என்பதன் பொருள் யாது?

8. "மொழி எதிர் மொழிதல் பாங்கற்கு உரித்தே" – பொருள் கூறுக.

9. “தாய்க்கும் உரித்தால் போகுடன் கிளப்பின்” – விளக்குக.

10. தலைவன் தலைவியர் ஊர்ந்து வரும் ஊர்திகளாகத் தொல்காப்பியர் சுட்டுவன யாவை?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) உடன்போக்கின் போது கண்டோர் கூற்று நிகழும் இடங்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) பெருந்திணையின் இயல்புகள் குறித்து விளக்குக.

12. (அ) புறத்திணைகள் ஏழற்கும் பொதுவான வழுக்கள் எத்தனை? தெளிவு செய்க.

(அல்லது)

(ஆ) ஆண்பால் காஞ்சித் துறைகளை விளக்கி எழுதுக.

13. (அ) செவிலி கூற்று நிகழும் சூழல்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) களவொழுக்கத்தில் தோழி கூற்று நிகழ்விடம் குறித்துத் தெளிவுப்படுத்துக.

14. (அ) தலைவனின் பெருமை சிறுமைகளாகத் தோழி கூறுவனவற்றைக் கற்பியல் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) வாயில்களின் சிறப்புப் பணிகளாகக் கற்பியல் கூறுவன யாவை? தெளிவுப்படுத்துக.

15. (அ) பொருளியல் வழிய அறியலாகும் தலைவன் தலைவி இருவருக்கும் உரிய பாற்கிளவிகள் யாவை? விளக்குக.

(அல்லது)

(ஆ) தோழியின் இயல்புகளாகப் பொருளியல் கூறும் செய்திகளை விளக்கி எழுதுக.

பகுதி இ $(3 \times 10 = 30)$

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. உவமம் பற்றித் தொல்காப்பியர் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

17. புறத்திணையியல் வழி அறியலாகும் பண்டைய போர்முறை, பழக்க வழங்கங்கள் முதலியவற்றைத் தொகுத்துரைக்க.

18. தலைவி கூற்று நிகழுமிடங்களைத் தொகுத்துரைக்க.

19. தலைவியின் சிறப்பியல்புகளாகக் கற்பியல் கூறுவனவற்றை வகைப்படுத்தியுரைக்க.

20. பொருளியல் கூறும் தலைவி தோழி இருவருக்கும் உரிய இயல்புகள் குறித்துக் கட்டுரை வரைக.

---

| F–9272 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA3E5 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2023**

**Third Semester**

தமிழ்

விருப்பப்பாடம் - பணிவாய்ப்புத் தமிழ்

**(From 2018 batch)**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

$(75 \times 1 = 75)$

1. இடைநிலை விகுதி இல்லாமல் பகுதியாகவே உள்ள சொற்களைக் கொண்ட மொழி

 (அ) தனிநிலைமொழி

 (ஆ) ஒட்டுநிலை மொழி

 (இ) உட்பிணைப்பு நிலைமொழி

 (ஈ) வடமொழி

2. தொன்மையான எழுத்தெனப்படுவது

 (அ) வட்டெழுத்து (ஆ) பிராமி எழுத்து

 (இ) கிரந்த எழுத்து (ஈ) ஒலி எழுத்து

3. திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் நூலை எழுதியவர்

 (அ) கா. கோவிந்தன் (ஆ) க. ரத்னம்

 (இ) கால்டுவெல் (ஈ) எல்லீஸ்

4. திருந்திய திராவிடமொழிகளின் எண்ணிக்கை

(அ) மூன்று (ஆ) நான்கு

(இ) ஐந்து (ஈ) ஆறு

5. தமிழ்மொழி என்பது

(அ) தென்திராவிடமொழி

(ஆ) நடுத்திராவிடமொழி

(இ) வடதிராவிடமொழி

(ஈ) தனித்திராவிடமொழி

6. இந்தியாவிற்கு வெளியே பேசப்படும் ஒரே திராவிடமொழி

(அ) பர்ஜி (ஆ) பிராகுயி

(இ) கடபா (ஈ) குயி

7. மொகஞ்சதாரா, ஹரப்பாவில் கண்டெடுக்கப்பட்ட மொழி திராவிட மொழியே என்று கூறியவர்.

(அ) கால்டுவெல் (ஆ) எல்லீஸ்

(இ) ஹீராஸ்பாதிரியார் (ஈ) தாமஸ்பரோ

8. எழுத்துப் பிறப்பினைக் கூறும் நூல்

(அ) தொல்காப்பியம் (ஆ) தண்டியலங்காரம்

(இ) அணியிலக்கணம் (ஈ) நன்னூல்

9. தனித்து இயங்கும் ஆற்றல் கொண்ட மொழி எனப்படுவது

(அ) தமிழ் (ஆ) தெலுங்கு

(இ) கன்னடம் (ஈ) மலையாளம்

10. இடைக்காலத் தமிழகம் பற்றிக் குறிப்பிடுபவர்

(அ) தாலமி (ஆ) பிளினி

(இ) மெகஸ்தனிஸ் (ஈ) யுவான்சுவாங்

11. முச்சங்கம் பற்றிய வரலாற்றை முதலில் கூறியவர்

(அ) தொல்காப்பியர் (ஆ) சீத்தலைச்சாத்தனார்

(இ) நக்கீரர் (ஈ) நாவுக்கரசர்

12. முச்சங்கத்திற்கும் உரிய நூல் எனப்படுவது

(அ) தொல்காப்பியம் (ஆ) அகத்தியம்

(இ) முதுநாரை (ஈ) இந்திரகாளியம்

13. 'சங்கத்தமிழ் மூன்றும் தா' என்றவர்

(அ) சம்பந்தர் (ஆ) திருமங்கையாழ்வார்

(இ) சேக்கிழார் (ஈ) ஔவையார்

14. முதல் உரையாசிரியர் எனப்படுபவர்

(அ) இளம்பூரணர் (ஆ) சேனாவரையர்

(இ) நக்கீரர் (ஈ) நச்சினார்க்கினியர்

15. 'நெடுந்தொகை' என அழைக்கப்படுவது

(அ) புறநானூறு (ஆ) அகநானூறு

(இ) நற்றிணை (ஈ) கலித்தொகை

16. 'இந்திரவிழா' பற்றிக் கூறும் தொகை நூல்

(அ) அகநானூறு (ஆ) குறுந்தொகை

(இ) ஐங்குறுநூறு (ஈ) கலித்தொகை

17. பதிற்றுப்பத்தில் ஆறாம்பத்தின் பாட்டுடைத்தலைவன்

(அ) இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

(ஆ) ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்

(இ) செல்வக்கடுங்கோ வாழியாதன்

(ஈ) இளஞ்சேரர் இரும்பொறை

18. 'ஏறு தழுவுதல்' பற்றிக் கூறும் நூல்

(அ) அகநானூறு (ஆ) புறநானூறு

(இ) குறுந்தொகை (ஈ) கலித்தொகை

19. நிலையாமையைக் கூறும் திணை

(அ) வெட்சித் திணை (ஆ) கரந்தைத் திணை

(இ) வஞ்சித்திணை (ஈ) காஞ்சித்திணை

20. 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்றவர்

(அ) குடபுலவியனார்

(ஆ) கணியன் பூங்குன்றனார்

(இ) கோவூர்கிழார்

(ஈ) மதுரை இளநாகனார்

21. ஆரிய அரசன் பிரகதத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்தக் கபிலர் பாடியது

(அ) பெரும்பாணாற்றுப்படை

(ஆ) சிறுபாணாற்றுப்படை

(இ) குறிஞ்சிப்பாட்டு

(ஈ) முல்லைப்பாட்டு

22. நான்மணிக்கடிகையின் ஆசிரியர்

(அ) கபிலர் (ஆ) சமண முனிவர்கள்

(இ) பூதஞ்சேந்தனார் (ஈ) விளம்பி நாகனார்

23. திருக்குறளை இலத்தீன் மொழியில் மொழி பெயர்த்தவர்

(அ) ஜி.யு. போப் (ஆ) வைத்யநாதபிள்ளை

(இ) வீரமாமுனிவர் (ஈ) ஏரியல்

24. ஐஞ்சிறு காப்பியங்கள் அனைத்தும்...

(அ) சைவக்காப்பியங்கள்

(ஆ) வைணவக்காப்பியங்கள்

(இ) சமணக்காப்பியங்கள்

(ஈ) பௌத்தக்காப்பியங்கள்

25. மணநூல் என்றழைக்கப்படுவது

(அ) சிலப்பதிகாரம் (ஆ) மணிமேகலை

(இ) சீவகசிந்தாமணி (ஈ) வளையாபதி

26. உயிரளபெடைக்குரிய மாத்திரை அளவு

(அ) 1 (ஆ) 2

(இ) 3 (ஈ) 1/2

27. பல் இதழ் இயையப் பிறக்கும் எழுத்து

(அ) ச (ஆ) ட

(இ) ண (ஈ) வ

28. விளிவேற்றுமை என்பது

(அ) முதல்வேற்றுமை (ஆ) இரண்டாம் வேற்றுமை

(இ) நான்காம்வேற்றுமை (ஈ) எட்டாம் வேற்றுமை

29. ‘வழிபடுதெய்வம் நிற்புறங்காப்ப’ - என வாழ்த்துவது

(அ) புறநிலை வாழ்த்து (ஆ) வாயுறை வாழ்த்து

(இ) அவையடக்கம் (ஈ) செவியறிவுறூஉ

30. நண்டு, தும்பி- ஆகியன

(அ) ஓரறிவு உயிர் (ஆ) ஈரறிவு உயிர்

(இ) மூவறிவு உயிர் (ஈ) நான்கறிவு உயிர்

31. யாப்பருங்கலக்காரிகையின் ஆசிரியர்

(அ) தொல்காப்பியர் (ஆ) பவணந்தி முனிவர்

(இ) அமிர்தசாகரர் (ஈ) நாற்கவிராசநம்பி

32. ஓரசையே சீராக வருவது

(அ) அசைச்சீர் (ஆ) ஆசிரிய உரிச்சீர்

(இ) வெண்சீர் (ஈ) பொதுச்சீர்

33. காய் முன் நேர் வருதல்

(அ) இயற்சீர் வெண்டளை

(ஆ) வெண்சீர் வெண்டளை

(இ) கலித்தளை

(ஈ) ஒன்றிய வஞ்சித்தளை

34. கலிப்பாவிற்குரிய ஓசை

(அ) செப்பலோசை (ஆ) அகவலோசை

(இ) துள்ளலோசை (ஈ) தூங்கலோசை

35. கைக்கிளை என்பது

(அ) காமம் (ஆ) ஒருதலைக் காமம்

(இ) அன்புடைக்காமம் (ஈ) பொருந்தாக்காமம்

36. பக்தி இலக்கியக் காலம் என்றழைக்கப்படுவது

(அ) சங்ககாலம் (ஆ) களப்பிரர் காலம்

(இ) பல்லவர் காலம் (ஈ) சோழர் காலம்

37. 7-ஆம் திருமுறையை அருளியவர்

(அ) சம்பந்தர் (ஆ) நாவுக்கரசர்

(இ) சுந்தரர் (ஈ) மாணிக்கவாசகர்

38. கூன்பாண்டியனின் வெப்புநோயை போக்கியவர்

(அ) திருமூலர் (ஆ) சம்பந்தர்

(இ) நாவுக்கரசர் (ஈ) திருமாளிகைத்தேவர்

39. திருமந்திரம் அருளியவர்

(அ) காரைக்காலம்மையார்

(ஆ) திருமூலர்

(இ) கருவூர்த்தேவர்

(ஈ) கண்டராதித்தர்

40. 'தொண்டர்சீர் பரவுவார்' என்ற பெயருடையார்

(அ) திருத்தக்கத்தேவர் (ஆ) சேக்கிழார்

(இ) இசைஞானியார் (ஈ) திருமூலர்

41. 'கண்ணிநுண்சிறுத்தாம்பு'-பாடியவர்

(அ) பெரியாழ்வார் (ஆ) ஆண்டாள்

(இ) திருப்பாணாழ்வார் (ஈ) மதுரகவியாழ்வார்

42. ஒருபடி என்பது ஒற்றுநீக்கி எத்தனை எழுத்துகளைக் கொண்டது

(அ) 32 (ஆ) 22

(இ) 42 (ஈ) 12

43. சீறாப்புராணத்தை இயற்றியவர்

(அ) உமறுப்புலவர் (ஆ) அப்துல் காசிம் மரைக்காயர்

(இ) குணங்குடி மஸ்தான் (ஈ) வண்ணக்களஞ்சியப் புலவர்

44. சித்திரக்கவி பாடுவதில் வல்லவர் எனப்படுபவர்

(அ) காசிம்புலவர் (ஆ) சவ்வாதுப்புலவர்

(இ) சேகனாப்புலவர் (ஈ) செய்குத்தம்பிப் பாவலர்

45. ‘தொன்னூல் விளக்கம்’ என்ற ஐந்திலக்கண நூலை எழுதியவர்

(அ) சீகன்பால்கு (ஆ) கால்டுவெல்

(இ) ஜி.யு. போப் (ஈ) வீரமாமுனிவர்

46. தமிழ்-இலத்தீன் அகராதியை உருவாக்கியவர்

(அ) வீரமாமுனிவர் (ஆ) கால்டுவெல்

(இ) எல்லீஸ் (ஈ) ராபர்ட்-டி.நொபுலி

47. ‘கிறித்துவக்கம்பர்’ என்றழைக்கப்படுபவர்

(அ) வேதநாயக சாஸ்திரி

(ஆ) ஹெச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளை

(இ) ஆபிரகாம் பண்டிதர்

(ஈ) மு. தெய்வநாயகம்

48. சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தைத் தெளிவாகக் கூறும் நூல்

(அ) தொல்காப்பியம் (ஆ) நன்னூல்

(இ) நம்பியகப்பொருள் (ஈ) பன்னிருபாட்டியல்

49. தோற்றோரால் பெயர் பெறும் சிற்றிலக்கியம்

(அ) பிள்ளைத்தமிழ் (ஆ) கலம்பகம்

(இ) கோவை (ஈ) பரணி

50. ‘குழவி மருங்கினும் கிழவதாகும்’ என்று தொல்காப்பியரால் சுட்டப்படும் சிற்றிலக்கியம்

(அ) தூது (ஆ) கலம்பகம்

(இ) பிள்ளைத்தமிழ் (ஈ) உலா

51. 'உழத்திப்பாட்டு' என்றழைக்கப்படும் சிற்றிலக்கிய நூல்

(அ) அந்தாதி (ஆ) தூது

(இ) பள்ளு (ஈ) கலம்பகம்

52. நாட்டுப்புறக் கலைகளில் கரகாட்டத்துடன் தொடர்புடைய தெய்வமாகக் கருதப்படுவது

(அ) சுடலைமாடன் (ஆ) சிவன்

(இ) பெருமாள் (ஈ) மாரியம்மன்

53. 'நாட்டார் வழக்காற்றியல்' நூலின் ஆசிரியர்

(அ) ஆறு. அழகப்பன் (ஆ) தே. லூர்து

(இ) ஆறு. இராமநாதன் (ஈ) நடராசன்

54. மதுரை மும்மணிக்கோவை நூலின் ஆசிரியர்

(அ) சக்திமுற்றப்புலவர்

(ஆ) அந்தகக்கவி வீரராகவ முதலியார்

(இ) படிக்காசுப்புலவர்

(ஈ) பலபட்டடைச் சொக்கநாத புலவர்

55. 'தன்னை ஷெல்லிநாதன்' என்றழைத்துக் கொண்டவர்

(அ) பாரதியார் (ஆ) பாரதிதாசன்

(இ) நாமக்கல் கவிஞர் (ஈ) கண்ணதாசன்

56. 'பாரதியை நினைத்தால் இந்தியன் நான் என்றிடும் நல் இறுமாப்பு உண்டாம்' என்று கூறியவர்

(அ) பாரதிதாசன் (ஆ) கவிமணி

(இ) சுரதா (ஈ) நாமக்கல் கவிஞர்

57. ‘கற்ற பெண்களின் சிறப்பைக் கூறும் பாரதிதாசனின் படைப்பு’

(அ) சஞ்சீவி பர்வதத்தின் சாரல்

(ஆ) குடும்பவிளக்கு

(இ) இருண்டவீடு

(ஈ) புரட்சிக்காப்பியம்

58. உவமைக்கவிஞர் எனப்புகழப்படுபவர்

(அ) கண்ணதாசன் (ஆ) சுரதா

(இ) முடியரசன் (ஈ) வாணிதாசன்

59. முதன்முதலில் புதுக்கவிதையை வெளியிட்ட இதழ்

(அ) மணிக்கொடி (ஆ) எழுத்து

(இ) வானம்பாடி (ஈ) ஞானரதம்

60. ‘கவிக்கோ’ பட்டம் பெற்ற படிமக்கவிஞர்

(அ) மீரா (ஆ) நா. காமராசன்

(இ) அப்துல்ரகுமான் (ஈ) மு. மேத்தா

61. வைரமுத்துவின் முதல் மரபுக்கவிதைத் தொகுப்பு

(அ) கவிராஜன் கதை

(ஆ) தண்ணீர் தேசம்

(இ) வைகறை மேகங்கள்

(ஈ) இளநெஞ்சின் ஏக்கம்

62. ஒரு புளியமரத்தின் கதையின் ஆசிரியர்

(அ) தருமு சிவராமு (ஆ) சுந்தரராமசாமி

(இ) சிற்பி (ஈ) ஈரோடு தமிழன்பன்

63. திரைப்படத்துறையில் பொதுவுடைமைப் பாடலை இயற்றிய பெருமைக்குரியவர்

(அ) தஞ்சை ராமையாதாஸ்

(ஆ) உடுமலை நாராயணகவி

(இ) பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம்

(ஈ) கண்ணதாசன்

64. குழந்தைகளுக்கான கோகுலம் இதழின் ஆசிரியர்

(அ) கவிமணி (ஆ) அழ. வள்ளியப்பா

(இ) பூவண்ணன் (ஈ) தூரன்

65. உரையாசிரியர் என்று குறிக்கப்படுபவர்

(அ) சேனாவரையர் (ஆ) நச்சினார்க்கினியர்

(இ) பேராசிரியர் (ஈ) இளம்பூரணர்

66. கலிங்கத்துப்பரணியை முதல்முதலாக மேற்கோள் காட்டிய உரையாசிரியர்

(அ) அடியார்க்கு நல்லார்

(ஆ) பரிமேலழகர்

(இ) மயிலைநாதர்

(ஈ) சிவஞான முனிவர்

67. தமிழில் கால ஆராய்ச்சியைத் தொடங்கியவர்

(அ) மறைமலையடிகள்

(ஆ) உ.வே. சாமிநாதையர்

(இ) திரு.வி. கலியாண சுந்தரனார்

(ஈ) ரா.பி. சேதுப்பிள்ளை

68. 'தினவர்த்தமானி' இதழின் ஆசிரியர்

(அ) சி.வை. தாமோதரம் பிள்ளை

(ஆ) பூரணலிங்கம் பிள்ளை

(இ) நாவலர் சோம சுந்தரபாரதியார்

(ஈ) கா. நமச்சிவாய முதலியார்

69. ஆய்வு நெறிமுறைகளைத் தமிழுக்கு அறிமுகம் செய்தவர்

(அ) வையாபுரிப் பிள்ளை

(ஆ) இரா. ராகவையங்கார்

(இ) மு. ராகவையங்கார்

(ஈ) மயிலை சீனி. வேங்கடசாமி

70. 'செந்தமிழ்' சொற்பிறப்பு அகரமுதலி எழுதியவர்

(அ) ராஜாஜி

(ஆ) தேவநேயப் பாவாணர்

(இ) டி.கே. சிதம்பரமுதலியார்

(ஈ) ந.மு. வேங்கடசாமி நாட்டார்

71. சிறுகதைக் கூறுகளைப் பெற்றுள்ளதாகக் கருதப்படும் இலக்கியம்

(அ) சங்க இலக்கியம் (ஆ) பக்தி இலக்கியம்

(இ) காப்பிய இலக்கியம் (ஈ) சிற்றிலக்கியம்

72. முதல் தமிழ்ச் சிறுகதை

(அ) மங்கையர்க்கரசியின் காதல்

(ஆ) குளத்தங்கரை அரசமரம்

(இ) பரமார்த்த குரு கதைகள்

(ஈ) குசிகர் குட்டிக்கதைகள்

73. தமிழின் முதல் புதினம்

(அ) கமலாம்பாள் சரித்திரம்

(ஆ) பிரதாப முதலியார் சரித்திரம்

(இ) மோகனாங்கி

(ஈ) மண்ணாசை

74. சித்திரப்பாவை புதினத்தின் ஆசிரியர்

(அ) சாண்டில்யன் (ஆ) கோவி. மணிசேகரன்

(இ) நா. பார்த்தசாரதி (ஈ) அகிலன்

75. ஒரே இரவில் முழுநாடகத்தையும் எழுதி முடிக்கும் வல்லமை பெற்ற தமிழ் நாடகத் தந்தை எனப்படுபவர்

(அ) பெ. சுந்தரம்பிள்ளை

(ஆ) பரிதிமாற்கலைஞர்

(இ) பம்மல் சம்பந்த முதலியார்

(ஈ) சங்கரதாஸ் சுவாமிகள்

| F–9273 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA4C1 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2023.**

**Fourth Semester**

தமிழ்

தொல்காப்பியம் - பொருளதிகாரம் – (பேராசிரியர் உரை)
(பின் நான்கு இயல்கள்)

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. மூப்பு என்றால் என்ன?

2. ‘கூழைவிரித்தல்’ என்றால் என்ன?

3. சுட்டிக் கூறா உவமம் என்றால் என்ன?

4. மெய் உவம உருபுகள் நான்கினைக் கூறுக.

5. ஆசிரியத்தளை என்றால் என்ன?

6. ஓரசைக்குரிய வாய்பாடுகளைக் கூறுக.

7. எச்சம் என்றால் என்ன?

8. பண்ணத்தி என்றால் என்ன?

9. காண்டிகை என்பதற்குத் தொல்காப்பியர் தரும் வரையறை யாது?

10. வழிநூல் என்றால் என்ன?

பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) 'அவையும் உளவே அவையளங்கடையே' - விளக்குக.

(அல்லது)

(ஆ) பெருந்திணைக்குரிய மெய்ப்பாடுகள் குறித்து விளக்கி எழுதுக.

12. (அ) உள்ளுறை உவமம் என்றால் என்ன? குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) உவமப் போலியின் வகைகளைத் தக்க சான்றுடன் விளக்குக.

13. (அ) அசையின் இலக்கணம் கூறி, அதன் வகைகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) 'யாப்பின் வழிய தென்மனார் புலவர்' - விளக்கி எழுதுக.

14. (அ) வண்ணத்தின் தொகை வகைகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) 'ஆங்கென மொழிப அறிந்திசி னோரே' - விளக்கி எழுதுக.

15. (அ) தொல்காப்பியர் கூறும் உயிரின வகைப்பாடுகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) தொல்காப்பிய மரபியல் கூறும் உத்தி வகைகளை விளக்குக.

பகுதி இ (3 × 10 = 30)

**எவையேனும் மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. களவுக்கால மெய்ப்பாடுகள் குறித்துக் கட்டுரை வரைக.

17. உவமையின் அமைப்பு முறை நுட்பத்தை விவரிக்க.

18. சீரின் இலக்கணம் கூறி, அதன் வகைகளை விரித்துரைக்க.

19. உரையின் வகைகள் குறித்துத் தொல்காப்பியர் கூறும் கருத்துக்களை விவரிக்க.

20. தொல்காப்பியர் கூறும் ஆண்பாற்பெயர்களைத் தக்க சான்றுடன் விவரிக்க.

| F–9274 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA4C2 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2023**

**Fourth Semester**

**தமிழ்**

**நாட்டுப்புறவியல்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours — Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. நாட்டுப்புற இயல் கழகம் ஆரம்பிக்கப்பட்ட நாடு எது? எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?

2. தமிழ் நாட்டுப்புற பாடல்களைப் பற்றி வெளிவந்த முதல் தமிழ் நூல் எது? அதன் ஆசிரியர் யார்?

3. நாட்டுப்புற விடுகதைகள் இரண்டினைக் கூறுக.

4. நாட்டுப்புறக் கதைப் பாடல்கள் இரண்டின் பெயரினை கூறுக.

5. நாட்டுப்புறப் பெண் தெய்வங்கள் நால்வரின் பெயரினைக் கூறுக.

6. பண்பாடு என்றால் என்ன?

7. கோலாட்டம் என்றால் என்ன?

8. ஓவியக் கலைகள் மூன்றின் பெயரினைக் கூறுக.

9. மொழியியல் என்றால் என்ன?

10. உளவியல் அறிஞர்கள் இருவரின் பெயரினைக் கூறுக.

பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) இந்திய நாட்டுப்புறவியல் வரலாறு குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) பல்கலைக்கழகங்களில் நாட்டுப்புற இயல் ஆய்வு நிலை குறித்து விளக்கி எழுதுக.

12. (அ) இந்தியப் புராணக் கதைகள் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புற இலக்கியங்கள் குறித்து விளக்கி எழுதுக.

13. (அ) நாட்டுப்புற மக்களிடம் வழிபாடுகள் பெறுமிடத்தினை மதிப்பிடுக.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புறச் சடங்குகள் குறித்து விளக்கி எழுதுக.

14. (அ) ஒயிலாட்டத்தின் சிறப்புகளையும் அதனை நிகழ்த்தும் முறைகளையும் விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புற மக்களிடம் கரகாட்டக்கலை பெறுமிடத்தினை ஆராய்க.

15. (அ) ஒப்பாரிப் பாடல்களை உளவியல் நோக்கில் ஆராய்க.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புறப் பாடல்களில் அறிவியல் புதுமைகள் இடம் பெறும் திறத்தினைத் தெளிவுபடுத்துக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. நாட்டுப்புற இயல் வகைப்பாடுகள் குறித்துக் கட்டுரை வரைக.

17. பழமொழிகளின் அமைப்பு முறை குறித்து விவரிக்க.

18. நாட்டுப்புற இலக்கியங்களில் நம்பிக்கை பெறுமிடத்தினை ஆராய்க.

19. நாட்டுப்புற விளையாட்டுக்கள் குறித்து கட்டுரை வரைக.

20. நாட்டுப்புற பாடல்களில் காணலாகும் வரலாற்று நிகழ்வுகளைத் தொகுத்துரைக்க.

| F–9276 |
|---|

| Sub. Code |
|---|
| 7MTA4E2 |

**M.A. DEGREE EXAMINATION, APRIL 2023**

**Fourth Semester**

**தமிழ்**

**விருப்பப்பாடம் — சுற்றுலாவியலும் பயன்பாடும்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை எழுதுக.

1. சுற்றுலாவின் நோக்கம் யாது?

2. வழித்தங்கல் பயணிகுறித்து எழுதுக.

3. ரோமானியரின் பயணம் பற்றி குறிப்பு வரைக.

4. தாமஸ்குக்கின் பணி யாது?

5. பொருளாதாரச் செயல்பாடுகளில் மனித சக்தியின் மேம்பாட்டைக் கூறுக.

6. சுற்றுலாவில் சிற்பங்களின் சிறப்பை எழுதுக.

7. தமிழகத்தில் வரலாற்று சிறப்பு மிக்க கட்டிடங்களைக் கூறுக.

8. சுற்றுலாவில் வேலை வாய்ப்பு குறித்து கூறுக.

9. பயண முகவர் என்பவர் யார்?

10. சுற்றுலாவில் போக்குவரத்தின் வகைகளைக் கூறுக.

**பகுதி ஆ** (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை எழுதுக.

11. (அ) ஆன்மீகச் சுற்றுலா குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) சுற்றுலாவின் உள்நோக்கங்களை எழுதுக.

12. (அ) சுற்றுலாப் பயணிகளின் முக்கியத்துவத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) சுற்றுலாவும் வரிவருமானமும் பற்றி எழுதுக.

13. (அ) சுற்றுலாவில் சிறுவணிகர்களின் பொருளாதார முன்னேற்றத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) சுற்றுலாவும் உணவுக் கலாச்சாரமும் குறித்து விளக்குக.

14. (அ) தமிழகச் சுற்றுலாமையங்களின் பணிகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) இந்தியாவில் கோடைகாலச் சுற்றுலாத் தலம் குறித்து விளக்குக.

15. (அ) சுற்றுலா வழிகாட்டிகளின் பணிகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) சுற்றுலா நடத்துனர் குறித்து விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடை எழுதுக.

16. சுற்றுலாவின் வகையும் பயனும் குறித்து விவரிக்க.

17. உலகளவில் சுற்றுலாத்துறையின் வளர்ச்சி நிலையைக் கட்டுரைக்க.

18. சுற்றுலாவினால் தேசியப் பொருளாதாரம் உயர்வடையும் நிலையைப் புலப்படுத்துக.

19. சுற்றுலாவின் வரலாற்றுக் காரணிகளை விவரிக்க.

20. சுற்றுலா அமைப்பும் அதன் வழி முறைகளையும் கட்டுரைக்க.

———————